யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.

# J/ Hartley College, Point Pedro.

## விடுமுறைக்கால செயலட்டை –2020 – தரம் 11
## Holiday Worksheet – 2020 – Grade 11

| | | | | |
|---|---|---|---|---|
| வரலாறு | 33 | T | I | ஒரு மணித்தியாலம் One Hour |

சுட்டெண் Index No

வரலாறு

பகுதி – I

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. அநுராதபுரக்காலம் முதல் கேட்டை இராசதானி ஆரம்பம் வரையிலான காலப்பகுதியில் எழுதப்பட்ட அதிகளவான நூல்கள் பின்வரும் எந்த நோக்கத்தோடு எழுதப்பட்டவை ஆகும்.
    1. அரசியல் 2. சமயம் 3. வர்த்தகம் 4. ஆக்கிரமிப்பு

02. இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவங்களைப் பெற்று இலங்கை பற்றி எழுதிய எழுத்தாளர்களில் அடங்காதவர்
    1. மெகஸ்தனிஸ் 2. ரிபைறோ 3. பிலிப்ஸ் பல்டியஸ் 4. இபன்பதூதா

03. புராதன காலத்தில் நாட்டின் பொருளாதார நிலை வர்த்தகம், தொழில்நுட்ப அறிவு போன்றவற்றை அறியப்பயன்படும் மூலாதாரங்கள்
    1. கல்வெட்டுக்கள் 2. பராதன சிதைவுகள் 3. நாணயங்கள் 4. செதுக்கல்கள்

04. பின்வரும் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்கள் வாழ்ந்த கற்குகைகளில் தாழ் நில உயர்வலய குகை எது?
    1. பாகியன்கல 2. பெலன்பதி பெலஸ்ஸ
    3. பதிராஜவெல 4. அலிகல

05. ஆரம்ப வரலாநற்று கால இலங்கையில் கி.மு 250 ம் ஆண்டளவில் எழுதப்பட்ட பிராமி கல்வெட்டு ஒன்றில் “புரகமத்த” எனும் பதவிப் பெயர் ஒன்றின் மூலம் அறியப்பட்ட விடயம் யாதெனில்அது நகரத்தின்
    1. பிரதான கட்டடக் கலைஞரைக்குறிக்கின்றது.
    2. பிரதான சிற்ப கலைஞரைக் குறிப்பிடுகிறது.
    3. பிரதான நடனக்கலைஞரைக் குறிப்பிடுகின்றது.
    4. பிரதான செதுக்கல் கலைஞரை குறிப்பிடுகின்றது.

06. பின்வரும் மன்னர்களுள் தன்னைக் குபேரக்கடவுளாக கருதிக் கொண்டவர் யார்.
    1. நிஸங்கமல்லன் 2. குட்ட கன்ன அபய 3. முதலாம் காசியப்பன் 4. மகாசேனன்

**பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 7ம் 8ம் வினாக்களுக்கு விடை எழுதுக**

A – மாந்தை சர்வதேச துறைமுகத்தை அக்கால அநுராதபுர ஆட்சியாளரான எல்லாளனிடமிருந்து மீட்டுக்கொண்டமை

B – அரச வரி அறவீடு முறைப்படுத்தப்பட்டதுடன் நாட்டை நிர்வாக அலகுகளாகப்பிரித்து நிர்வகிப்பதற்கு முயற்சி செய்தமை

C – அநுராதபுரத்திற்கு பதிலாக பொலநறுவையை தனது தலைநகராக மாற்றிக் கொண்டமை

D - இலங்கையின் வரலாற்றில் முதலாவது ஒழுங்கமைப்பட்ட யுத்த செயற்பாட்டிற்கு தலைமைத்துவத்தை வழங்கியமை

E – யுத்த நடவடிக்கை மூலம் சோழர்களை தோல்வி அடையச் செய்து நாட்டை மீண்டும் ஐக்கியப்படுத்தியமை

07. மேற்கூறிய கூற்றுக்களில் துட்டகைமுனு மன்னனுடன் தொடர்புடையவை

1. A, C 2. A, D 3. C, E 4. B, C

08. மேற்கூறிய கூற்றுக்களுள் முதலாம் விஜயபாகு மன்னனுடன் தொடர்புடையவை

1. A, C 2. A, D 3. C, E 4. B, C

09. இலங்கையின் புராதன சமூகத்தில் அநுராதபுர விவசாயிகள் சில காலம் பயிரிடப்பட்டு கைவிடப்பட்ட பின்னர் மீளவும் பயிரிடப்படும் சேனைகளை எப் பெயர் கொண்டு அழைப்பர்

1. நவதெனி 2. பிடபிம்
3. செகன் 4. கனத்த

10. கண்டிக்காலத்திற்குரிய வேதிகிரிய தேவாலயத்திற்கு அருகில் காணப்பட்ட கல்வெட்டு ஒன்றில் "தடிக சுமண" எனும் கலைஞரைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இவருடன் தொடர்புடைய கைத்தொழில்

1. நெசவு 2. மட்பாண்டம் வனைதல்
3. தந்தச் செதுக்கல் 4. இரதினக்கல் அகழ்வு

11. புராதன காலத்தில் நிலஅளவீட்டில் பயன்படுத்தப்பட்ட அளவீட்டு முறை எது

1. கரிசை 2. அணு 3. உசக்க 4. தரண

**கீழே A – F வரையில் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 12ம் 13ம் வினாக்களுக்கு விடையளிக்க**

A – நவநீதம் B - உலோகக்கத்திரிக்கோல்
C – கழிவுப்பொருள் முகாமை D- வஜ்ர சும்மட்ட
E – ரன்சிரியல் F – மருத்துவ ஓடம்

12. ரூவன் வெலிசாய தூபியுடன் தொடர்புடைய அம்சங்களைக் கொண்ட விடை எது.

1. A, B, F 2. A, D, F 3. B, D, E 4. A, D, E

13. ஆலாகணப் பிரிவெனாவுடன் தொடர்புடைய அம்சங்களைக் கொண்ட விடை எது?

1. B, C, F 2. B, C, E 3. A, B, C 4. B, C, D

14. மகாபராக்கிரமபாகு மன்னின் பிறந்த இடமான தெடிகமவின் பழைய பெயர்

1. மாகம 2. காகம 3. புங்க காம 4. உருவெல கம

15. உரிய காலத்தில் அறுவடை செய்யத் தவறும் நபர்களுக்கு ஐந்து கலங் அபராதமாக செலுத்துமாறு கூறப்பட்டமை தொடர்பான சட்டம் பொறிக்கப்பட்ட கல்வெட்டு

1. கொடவாய தூண்கல்வெட்டு 2. சித்துள் பவ்வக் கல்வெட்டு
3. பதுறை தூண் க்லவெட்டு 4. கொண்ட வட்டவாண் தூண் கல்வெட்டு

16. பாதிய திஸஸ் மன்னன் காலத்தில் தனது குடும்பத்திற்கு சொந்தமான நில புலங்களின் ஒரு பகுதியை பௌத்த விகாரைக்கு வழங்கியதாக கூறப்படுகின்ற ஒரு பெண்

1. தலுதா லஸ்மி 2. அசோகமாலா 3. விகாரமா தேவி 4. சுமணா

17. குருநாகல் இராசதானியில் நான்காம் பராக்கிரபாகு மன்னன் கி.பி 1302இல் ஆட்சி பீடம் ஏறியதாக கூறப்படும் நூல்
    1. கவிசிலுமின  2. சரசோதி மாலை  3. குத்தில காவியம்  4. பூஜாவெலிய

18. இபின் பதுதா எனும் அராபிய தேச சஞ்சாரி இலங்கைக்கு வருகைதந்தது பின்வரும் எந்த இராசதானி காலத்திலாகும்
    1. தம்பதெனியா  2. யாப்ப கூவ  3. குருநாகல்  4. கம்பளை

19. கீழே A, B, C, D எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளில் முதலாம் பராக்கிரம பாகு மன்னன் பொலநறுவையை ஆட்சி செய்த காலப்பகுதியில் வாழ்ந்த ஒருவருக்கு அறிந்து கொள்ள முடியாத நிகழ்வுகளை உள்ளடக்கிய விடையை தெரிவு செய்க
    A – அபயகிரி விகாரை அமைக்கப்பட்டமை
    B- சந்திரபானு இலங்கை மீது படையெடுத்தமை
    C - இலங்கை சோழர் ஆட்சியிலிருந்து விடுபட்டமை
    D – சீனாவில் புங்லோ எனும் பேரரசால் அனுப்பப்பட்ட செங்கோ எனும் தளபதி இலங்கை மீது ஆக்கிரமித்தமை
    1. Aயும் Bயும்  2. Bயும் Cயும்  3. Bயும் Dயும்  4. Cயும் Dயும்

20. கண்டி இராச்சியத்தின் முதலாவது நாயக்க வம்சத்து மன்னன்
    1. ஸ்ரீவிஜய ராஜசிங்க மன்னன்  2. ஸ்ரீவீர பராக்கிரம நரேந்திர சிங்க மன்னன்
    3. கீர்த்தி ஸ்ரீராஜசிங்க மன்னன்  4. இராஜாதி இராஜ சிங்க மன்னன்

- **வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர பிக்குவிற்கு சங்கராஜ பதவி வழங்கியமை**
- **கி.பி 1638இல் கன்னொருவை போரில் போத்துக்கேயரை தோல்வியடையச் செய்தமை.**

21. மேற்குறித்த இத்தகவல்களுடன் தொடர்புடைய கண்டி மன்னர்கள் முறையே
    1. 2ம் இராஜசிங்கன், முதலாம் விமலதர்ம சூரியன்
    2. முதலாம் விமலதர்ம சூரியன், இரண்டாம் இராஜசிங்கன்
    3. இரண்டாம் இராஜசிங்கன், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
    4. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன், இரண்டாம் இராஜசிங்கன்

22. முதலாம் விஜயபாகு மன்னனின் கூலிப்படையினரான வேளைக்கார படையினர் எங்கிருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.
    1. கலிங்க தேசம்  2. கேரள தேசம்  3. சேர நாடு  4. சோழநாடு

23. குளக்கட்டுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் குளத்தில காணப்படும் மேலதிக நீரை வெளியேற்ற உதவும் தொழில்நுட்ப கூறு
    1. சுருங்கை  2. கலிங்கல்  3. அலைதாங்கி  4. கலிங்கல் தொட்டி

24. போத்துக்கேயர் கண்டி இராசதானியை கைப்பற்றும் பொருட்டு மேற்கொண்ட போர்களில் ரந்தெனிகெல போருக்கு தலைமை தாங்கிய போாத்துக்கேய கப்பித்தான் ஜெனரல்
    1. தொன் ஜெரோனிமேத அசவேது  2. தியோகுத மெல்லோ கஸ்ரோ
    3. ஜெரோ லோபஸ்த சூசா  4. கெலஸ் தாந்தினு தாஸ

அட்டவணையை அவதானித்து 25ம் 26ம் வினாக்களுக்கு விட தருக

| நிரல் - I | நிரல் - II | நிரல் - III |
|---|---|---|
| A – போலந்து | D – பவியீர்பபு விவை | G – ஜொஹ்னேஸ் கூட்டன்பேர்க் |
| B – ஜேர்மனி | E – அச்சியந்திரம் | H – நிக்கலஸ் கொப்பனிக்கஸ் |
| C - இங்கிலாந்து | F – புவி கோளவடிவமானது | I – ஐசாக் நியூட்டன் |

25. நிரல் Iஇல் Eயுடன் தொடர்புடைய மறுலர்ச்சிக்கால விஞ்ஞானியையும் அவரது தாய் நாட்டையும் குறிக்கும் விடை

1. G, B　　2. G, C　　3, H, A　　4. I, B

26. நிரல் III இல் H உடன் தொடர்புடைய விஞ்ஞானக் கண்டுபிடிப்பையும் அவரது தாய் நாட்டையும் குறிக்கும் விடை

1. D, B　　2. F, A　　3. E, C　　4. F,C

27. நிரல் II இல் னு உடன் தொடர்புடைய மறுமலர்ச்சிக்கால விஞ்ஞானியையும் அவரது தாய்நாட்டையும் குறிக்கும் விடை

1. G, A　　2. H, C　　3. I, C　　4. I, B

28. இலங்கையில் கரையோரப்பிரதேசங்களில் பிரித்தானியர் ஆட்சியின் போது நியமிக்கப்பட்ட முதலாவது பிரித்தானிய ஆளுனர்

1. தேமஸ்மெயிட்லண்ட்　　2. பிரட்ரிக்நோத்
3. டேறாபேட் பிறவுன்ரிக்　　4. எட்வேட் பான்ஸ்

29. 1885ஆம் ஆண்டு ரெம்லர் என்பவரால் மோட்டார் வண்டி (கார்) கண்டு பிடிக்கப்பட்டது. இவர் எந்த நாட்டை பிறப்பிடமாகக் கொண்டவர்

1. அமெரிக்கா　　2. இங்கிலாந்து　　3. இத்தாலி　　4. ஜேர்மனி

❖ **கீழே A – F வரையிலான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 30ம் 31ம் வினாக்களுக்கு விடைதருக**

A – கட்டாய இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டது.
B – வரையறுக்கப்பட்ட வாக்குரிமை
C – பொதுசன அபிப்பிராய தேர்தல் முறை
D – நிர்வாககுழு முறை
E – ஆளுனர் நாயகப்பதவி
F – தேசிய அரசுப்பேரவை

30. சோல்பரி அரசியல் யாப்பு சீர்திருத்தம் மற்றும் டொனமூர் அரசியல் யாப்பு சீர்திருத்தம் ஆகியவற்றுடன் தொடர்புடைய தகவல்களின் முறையே உள்ளடக்கிய விடை

1. Eயும் Dயும்　　2. Fஉம், Dயும்　　3. Bயும், Cயும்　　4. Fஉம், Cயும்

31. 1972ம் ஆண்டின் அரசியல் யாப்பு சீர்திருததம் 1978ம் ஆண்டில் அரசியல் யாப்பு சீர்திருத்தம் ஆகியவற்றுடன் தொடர்புடைய தகவல்களை முறையே உள்ளடக்கிய விடை

1. Eயும;, Dயும்　　2. Aயும், Cயும்　　3. Fஉம், Cயும்　　4. Eயும், Cயும்

32. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கிய தலைவர்

1. கொல்லின் சு.னுசில்வா　　2. S.A விக்கிரம சிங்க
3. பிலிப் குணவர்த்தன　　4. கலாநிதி N. M பெரேரா

**கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள சோடிக்கூற்றுக்களை அல்லது சோடிச்சொற்களை அவதானித்து 33 – 36 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

A – 1. எட்வேட்பான்ஸ்
　　2. கோப்பிச் செய்கை

B – 1. இலங்கை மீது ஆங்கிலேயர் கவனம்
　　2. மொகாலய பேரரசு

C – 1. மேற்கிந்திய தீவுகள்
2. போ்டினன்ட் மன்னன், இசபொலா இளவரசி

D – 1. 1766 ஒல்லாந்தர் உடன்படிக்கை
2. இரண்டாம் இராஜ சிங்கன்

33. இரண்டாவதன் வீழ்ச்சி முதலாவதன் எழுச்சிக்கு காரணமாக அமைவதனை எடுத்துக்காட்டும் சோடிக்கூற்று அல்லது சோடிச்சொற்களைக் கொண்ட விடை
1. A 2. B 3. C 4. D

34. முதலாவதன் செயற்பாடு இரண்டாவதன் வளர்ச்சிக்கு காரணமாக அமைவதனை எடுத்துக் காட்டும் சோடிக்கூற்று அல்லது சோடிச்சொற்களைக் கொண்ட விடை
1. A 2. B 3. C 4. D

35. அரண்டாவத் அனுசரணை காரணமாக முதலாவது காட்டும் சோடிக்கூற்று அல்லது சோடிச்சொற்களைக் கொண்ட விடை
1. A 2. B 3. C 4. D

36. முதலாவதற்கும் இரண்டாவதற்கும் இடையே எவ்வித தொடர்பின்மையை காட்டும் சோடிக்கூற்று அல்லது சோடிச்சொற்களைக் கொண்ட விடை
1. A 2. B 3. C 4. D

37. மாளிகாகந்த வித்தியோதன பிரிவெனாவை தோற்றுவித்தவர்
1. இரத்மலானை தர்மலோக தேரர்
2. கிக்கடுவ ஸ்ரீசுமங்கல தேரர்
3. புலத்கம ஸ்ரீ சுமணதிஸ்ஸ தேரர்
4. வலான சித்தார்த்த தேரர்

**கீழே A, B என்பவற்றில் காணப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38ம் 39ம் வினாக்களுக்கு விடைதருக**

A – தரிசு நிலச்சட்டம் B – நிலத்தை பாழடையச் செய்யும் கொள்கை

38. பிரத்தானியர் ஆட்சிக்கு எதிரான முதலாவது சுதந்திரப்போராட்டம் தொடர்பானது.
1. Aயும் Bயும் சரியானவை
2. Aயும் Bயும் பிழையானவை
3. A சரியானது B பிழையானது
4. A பிழையானது B சரியானது

39. பிரித்தானியா் ஆட்சிக்கு எதிரான இரண்டாவது சுதந்திர போராட்டம் தொடர்பானது
1. Aயும் Bயும் சரியானவை
2. Aயும் Bயும் பிழையானவை
3. A சரியானது B பிழையானது
4. A பிழையானது B சரியானது

40. நிரல் Aயுடன் நிரல் Bயினை பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையை தெரிவு செய்க

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. கென்றிகோட் | A. புகையிரத இன்ஜின் |
| 2. சாமுவெல் மோஸ் | B. தொலைபேசி |
| 3. அலெக்ஸ்சாண்டர் கிரகெம்பல் | C. தந்தி முறை |
| 4. ஜோர்ஜ் ஸ்டீவின்சன் | d. ரோலர் இயந்திரம் |

1. ABCD 2. DCAB 3. BDAC 4. DCBA